www.tamilarangam.net




# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

# ஜே.ஆர்., பிரேமா, இந்தியப்படை கற்றுக்கொண்ட பாடங்கள்

இந்தியாவின் பழம்பெரும் ஆங்கில தினசரி 'இந்து.' இந்து குடும்பத்தைச் சேர்ந்தவர் ராம்.

இலங்கை இனப்பிரச்சனையில் தமிழ் இடதுசாரி அமைப்புக்களுக்கு ராம் ஆரம்பத்தில் ஆதரவாக இருந்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பினருடன் பேராசிரியர் சிவதம்பி ஊடாக இந்து ராமுக்கு அறிமுகம் ஏற்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தைச் சேர்ந்த மகேஸ்வரராஜா, ரமேஷ், ஆகியோரை இந்து ராமிடம் அறிமுகம் செய்து வைத்தார் பேராசிரியர் சிவத்தம்பி. பின்னர் பத்மநாபா, வரதராஜப் பெருமாள் ஆகியோருடன் ராமுக்கு நல்லுறவு ஏற்பட்டது.

சோவியத் சார்பு நிலைப்பாடு, ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் அன்றைய இடதுசாரி சிந்தனைகள் என்பவை ராமுக்கு பிடித்திருந்தன.

பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உடைவு கண்டபின்னர் ராமுக்கும் புலிகளுக்கும் இடையேயான உறவு பலப்பட்டது. புலிகளின் கட்டுப்பாடான செயற்பாடும், வடக்கு-கிழக்கில் அவர்களது முன்னணிப் பாத்திரமும் ராமை புலிகளது தீவிர ஆதரவாளராக மாற்றியிருந்தது.

ராஜீவ் காந்தி கொலைவரை 'ராம்' புலிகளின் தீவிர ஆதரவாளராக இருந்தார்.

'இந்து' பத்திரிகையினதும் 'ஃபுரொன்ட் லைன்' சஞ்சிகையினதும் ஆசிரியராக இருந்த திரு.ராம், 1991ல் புலிகள் தொடர்பாக எழுதிய கட்டுரை வெகு பிரபலமானது.

அக்கட்டுரையில் புலிகள் தொடர்பாகவும், பிரபாகரன் தொடர்பாகவும் 'ராம்' எழுதியவை இன்றுள்ள காலகட்டத்திற்கு பொருந்துகிறதா இல்லையா, என்பதை நீங்களே பார்த்து முடிவு செய்து கொள்ளுங்கள்.

"இராணுவரீதியில் பார்க்கும் பொழுது யுத்த நிறுத்தம் செய்வதோ யுத்தத்தைத் தொடருவதோ விடுதலைப் புலிகளின் கையிலேயே இருக்கிறது. இதில் அரசாங்கத்திற்கு ஒரு சிறு பங்குகூட இருப்பதாகத் தெரியவில்லை, ஒரு பாவமுமறியாத பொது மக்களைக் கொல்லுவதைத்தவிர.

விடுதலைப் புலிகளை அழிப்போமெனவும் இராணுவத் தீர்வொன்றைக் காண்பதில் வெற்றியடைவோமெனவும் கூறுவதெல்லாம் செல்லாக் காசு போன்றது.

இராணுவத் தீர்வின் கர்த்தாவான லலித் அத்துலத் முதலி முதற்கொண்டு புலிகளை சாதுவான பிராணிகளாக பழக்கி எடுப்போம் எனக் கோதாவில் இறங்கிய அமைதி காக்கும் படையினர் மற்றும் கதறும் கழுகுக் கூட்டத்தின் தலைவரான ரஞ்சன் விஜயரத்ன ஆகியோர் கூறியதும் இந்தக் கதையே. இந்த மூன்று பிரிவினரும் வெவ்வேறு யுத்திகளைக் கையாண்டார்கள். ஆனால் இறுதியில் யாவரும் ஒரே விதமான கசப்பான பாடத்தையே கற்றார்கள்.

1986-87ல் ஸ்ரீலங்கா அரசு நடத்திய கொடூரமான 'வடமராட்சி ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கையாலும்கூட தமிழ் மக்களைப் பணியவைக்க முடியவில்லை.

ஜூலை 29.1987ல் கைச்சாத்திடப்பட்ட ஸ்ரீலங்கா-இந்திய ஒப்பந்தம் என்னும் கப்பலும் தரை தட்டியது. ஒரு சிரேஷ்ட இந்திய ஜெனரல் ஒக்டோபர் 1987ம் ஆண்டு என்னைச் சந்தித்த பொழுது "மிஸ்டர் ராம். நாங்கள் இங்கே என்ன செய்கிறோம்? இந்தக் காரியத்தை முடிப்பதற்கு குறைந்தது 30 ஆண்டுகள் செல்லும். நாங்கள் ஆணைகளை நிறைவேற்றுகிறோம். எங்களுக்கு வேறு மாற்று வழியேதும் இல்லை" எனக் கூறினார்.

இதைப்போலவே 14 மாதகாலம் பிரேமதாசா நடாத்தி வந்த ஓரளவு இந்தியாவுக்கெதிரான பேச்சுவார்த்தைகள் ஜூன் 11. 1990ல் முறிந்து போயிற்று.

நேரத்திற்கு நேரம் 'ஜனநாயகச் சக்திகளுடன் மட்டுமே பேச்சு வார்த்தைகள் நடத்துவோம்' என்ற நிலைப்பாடுகளும் அடிக்கடி எழவே செய்தன.

இந்த நிலைப்பாட்டை மனதில் கொண்டே 1983-85 இடைப்பட்ட காலகட்டத்தில் இந்திய அரசும் ஸ்ரீலங்கா அரசும் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தினர். இப்படியான பேச்சுவார்த்தைகளில் தமது கை ஓங்கி நிற்கவேண்டும் என்பதற்காக இதே நேரம் இந்திய அரசாங்கம் பலதரப்பட்ட போராளிக் குழுக்களுக்கு பயிற்சி, ஆயுதம் முதலியனவற்றை வழங்கிவந்தது.

1983ம் ஆண்டு ஜூலை- ஆகஸ்ட் மாதங்களில் நடைபெற்ற இனக்கலவரத்தின் பின் இப்படியான யுத்திகள் பலிக்கக்கூடியதாக இல்லை.

## பிழையான கணிப்பு

விடுதலைப் புலிகளின் செல்வாக்கு அவர்களுடைய இராணுவ நடவடிக்கையால் மட்டுமே ஏற்பட்டதெனக் கூறுவது ஒரு பிழையான கணிப்பு. அதே நேரம் போராளிகளின் ஏ.கே.47களில் இருந்து செல்வாக்கு வரவில்லை என்றும் சொல்ல முடியாது.

விடுதலைப் புலிகளைத் தவிர வேறு குழுக்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவது ஒரு பலனையும் கொடுக்காது. புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பெரும் பகுதிகளையும் அவர்களது ஆயுத பலத்தையும் எடுத்து நோக்கினால் இது புலனாகும்.

அரசியல் தலைமையை பிரபாகரனுடைய விடுதலைப் புலிகளிடம் கொடுப்பது ஸ்ரீலங்காவிலும் இந்தியாவிலும் உள்ள பலருக்குக் கசப்பானதாகவுள்ளது. ஆனால் ஸ்ரீலங்கா-இந்திய ஒப்பந்தத்தினால் ஏற்பட்ட இவர்களுடைய இன்பக் கனவுகள் பின்பு இடம்பெற்ற நிகழ்ச்சிகளால் சிதறுண்டு போனபின் இவர்கள் தங்களது நிலைப்பாடுகளை மீளாய்ந்து திருத்திக் கொள்வது தங்களது சகலருக்கும் நன்மை பயக்கும்.

வடக்கிலும் கிழக்கிலும் விடுதலைப் புலிகளுக்குள்ள அரசியல் செல்வாக்கை குறைத்து மதிப்பீடு செய்து அவர்களை மீறிச் செல்வது மடமை.


"பொடியன்கள்" என செல்லமாக அழைக்கப்படும் இவர்களை தமிழ் மக்கள் தங்களுடைய உரிமைகளுக்கும், பாதுகாப்பிற்கும் போராடும் கரங்களாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இராணுவ ரீதியில் கணிப்பீடு செய்தால் விடுதலைப் புலிகள் தென் ஆசியாவில் உள்ள சகல போராளிக் குழுக்களிலும் பார்க்க திறமையுள்ளவர்களாகவே காணப்படுகின்றனர்.

"உலகம் என்றுமே கண்டிராத வீரப் போராளிகள்" என இவர்களை ஒரு இந்திய இராணுவ ஜெனரல் வர்ணித்தார். "உலகம் கண்ட யுத்த மேதைகளின் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியவர் பிரபாகரன்," என்று அவர் மேலும் கூறினார்.

கெரில்லாப் படையான விடுதலைப் புலிகள், தேவை ஏற்பட்ட பல சந்தர்ப்பங்களில் மரபுரீதியான யுத்தத்திலும் ஈடுபட்டு பெரும் வெற்றிகளைக் கண்டுள்ளனர்.

எல்.ரி.ரி.ஈ. என்பது தாழ்க்க முடியாத ஒரு கப்பல்.



## அளந்துபேசுபவர்

பிரபாகரன் வார்த்தைகளை அளந்து பேசுபவர். ஆனால் அவர் செயற்பாட்டில் அளவு என்பதே கிடையாது. அதேபோல் அதிமுக்கிய விஷயங்களை அறிவிக்கும் பொழுதும் அவருடைய தமிழ்ப் பேச்சுக்கள் கரைபுரண்டோடும். இதை நான் அவரை நேரில் 1986ம் ஆண்டு செப்டம்பர் மாதம் சென்னையிலும் 1987ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் யாழ்ப்பாணத்திலும் சந்தித்தபொழுது காணக்கூடியதாகவிருந்தது.

"நான் எனது இயக்கத்திலிருக்கும் போராளிகளை விடுதலை வீரர்களாகவே காண்கிறேன். எந்த நோக்கில் இருந்து பார்த்தாலும் அவர்களை வேறு விதமாகக் கணிக்கமுடியாது. அரச படை இன அழிவு ஏற்படுத்தும் இராணுவமாகச் செயல்படுகிறது. நாங்கள் தமிழ் மக்களுடைய விடிவுக்காகப் போராடும் ஒரு தேசிய இராணுவமாகச் செயல்படுகிறோம்!" என என்னிடம் கூறினார்.

அடுத்ததாக அவர்களது துணிச்சலையும் தியாக உணர்ச்சியையும் விவரிக்கும் பொழுது "நாங்கள்- ஏற்படவிருக்கும் பெரும் கஷ்டங்களை மக்களுக்கு முன்கூட்டியே விளக்கி, அவர்களை எல்லாவற்றிற்கும் தயாராக இருக்கும்படி செய்தோம். எமது எதிர்ப்பைத் தெரிவிக்க திடகாத்திரம் பூண்டோம். மடமையற்ற முறையில் போராட திட்டம் தீட்டினோம். எத்தனை போராளிகளை இழந்தாலும், போராட்டத்தை நிறுத்த மாட்டோம். இதுவே நாங்கள் எடுத்த முடிவு!" என்று கூறினார் பிரபாகரன்.

போராட்டத்தில் ஈடுபடாமல் வெளியே இருந்துகொண்டு தலைமைப் பீடத்தை எப்பொழுது கைப்பற்றலாம் என்று சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்போர் பலர்மீது பிரபாகரன் தனது வெறுப்பை வெளிப்படுத்தத் தவறவில்லை.

மூன்றாவதாக அமைப்பிலுள்ள கட்டுப்பாட்டைப் பற்றிக் கூறுகையில் "உண்மையைச் சொல்லப்போனால், இராணுவக் கட்டுப்பாடென்பது இரக்கமற்றது. எந்த இராணுவ நடவடிக்கைகளையும் எடுத்து நோக்கினால் வெற்றியே குறிக்கோளாக இருக்கும். ஏற்படும் விளைவுகள் அல்ல; நாங்கள் எதிர்நோக்குவதோ ஈவிரக்கமற்ற இராணுவத்தை இவர்களுக்கு முன்னால் நாங்கள் எப்படி சமாதான முறையில் பணியாற்றுவது? இது முடியாத காரியம் இதுதான் உண்மை!" எனக் கூறினார்.

கடமை, கட்டுப்பாடு, துப்பாக்கியின் பலம் என்பன பெரியதொரு பொறுப்பு. "துப்பாக்கிகளை வைத்திருப்பவர்களுக்கு வரையறையற்ற பலம் உண்டாகிறது. இந்தப் பலத்தை துஷ்பிரயோகம் செய்தால் சர்வாதிகாரம் உண்டாகும். அதனால்தான் எமது போராளிகளை கடுமையான கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறோம். ஒன்றை மட்டும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். ஈவிரக்கமில்லாத குழுக்களுக்கெதிராகவே நாங்களும் அவர்களுடைய பாணியில் நடந்து கொள்ளுகிறோம். அப்படிச் செய்யாவிட்டால் அவர்களை வெல்லமுடியாது!" எனக் கூறினார்.

## செயலே முதலில்

தமது இயக்கத்தின் அரசியல் கொள்கைகளை விளக்கும்பொழுது பிரபாகரன் சிங்கள அரசியல்வாதிகளை நம்பி நடக்கும் "டாம்பீகத்தை" நாம் அனுபவிக்க முடியாத நிலையில் உள்ளோம். தமிழ் ஈழம்தான் நாங்கள் பாதுகாப்பாக வாழ வழிவகுக்கும். இதற்கு மாற்று மருந்து வேறொன்றுமில்லை. ஆனாலும் உருப்படியான மாற்றுத் திட்டங்களை யாரும் அறிவித்தால் அவைகளை எமது மக்கள் முன் சமர்ப்பித்து அவர்கள் ஏற்றுக்கொண்டால், நாமும் எமது நிலைப்பாட்டை மாற்றுவது பற்றி யோசிப்போம்!" என கூறினார்.

தனது அணுகுமுறையில் அரசியல் குறைவாக இருப்பதாயும் இராணுவ அணுகுமுறையே கூடுதலாக இருப்பதாயும் பலர் கூறியதற்கு "நான் வார்த்தைகளில் குறைவாகவே நம்பிக்கை கொண்டவன். சீரான அரசியலில் மேடைப் பேச்சுக்களுக்கு இடமில்லை. செயலில் காட்டியபின்பே பேச்சுக்களில் ஈடுபடவேண்டும். வார்த்தைகள் செயல்களை ஒத்ததாக இருக்கவேண்டும். இந்த நிலையிலும் செயலுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்!" என்று கூறினார்.

பிரபாகரனுடைய ஹீரோக்கள் அனேகர் இந்திய விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டவர்களாகக் காணப்பட்டது. அவர்களில் முக்கியமாகக் காணப்பட்டவர்கள் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ், பகவத் சிங் ஆகிய இருவரும்.

பிரபாகரன் அவரது இயக்கத்தின் இலட்சியத்தை இம்மியளவும் பிசகவிடாத காவலாளியாகக் காணப்பட்டார். எல்.ரி.ரி.ஈ. யின் பிரதான தளபதியாக விளங்கும் பிரபாகரன் இப்பொழுதுள்ள போராளிகளுக்கும் வருங்கால வீரர்களுக்கும் ஒழுக்கத்தின் ஒப்பற்ற உதாரணமாகக் காணப்படுகிறார்.

ஸ்ரீலங்கா-இந்திய ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்ட சலுகைகளைப் பற்றிக் கேட்டபொழுது, "இதற்காகவா எங்கள் போராளிகள் எல்லாரும் தங்களது உயிர்களைத் தியாகம் செய்தார்கள்?" எனத் திருப்பிக் கேட்டார்.

அவருடைய இலட்சியக் கனவான தமிழீழம் கிடைத்தபின் என்ன செய்வாரென அவரைக் கேட்டபொழுது, அரசியலில் இருந்து ஒய்வு பெற்று ஆக்கபூர்வமான சமூக சேவைகளில் ஈடுபடப்போவதாகக் கூறினார் பிரபாகரன்.

தற்போதைய நிலையில் ஈழம் என்பது கனவாக இருக்கலாம். அதே நேரம் இந்த இயக்கத்தை முற்றாக அழித்து ஸ்ரீலங்காவின் ஒருமை பாதுகாக்கப்படும், என்று கூறுவது அதைவிடப் பெரிய கனவு. இது ஜனாதிபதிகளான ஜயவர்த்தனா, பிரேமதாசா மற்றும் இந்தியத் தலைவர்கள் பலர் பெரும் நஷ்டத்திற்குள்ளாகி படித்த பாடம்.

ஐ.பி.கே.எஃப்.க்கு ஏற்பட்ட கதியால் விடுதலைப் புலிகளுக்கு இந்தியாவில் ஆதரவு குறையலாம். ஆனால் எல்.ரி.ரி.ஈ. ஐயும் அதன் திறமைவாய்ந்த தலைவரான பிரபாகரனையும் ஒருவரும் குறைத்து மதிப்பீடு செய்ய முடியாது.

என்று எழுதியிருந்தார் இந்து 'ராம்'.

இந்திய மத்திய அரசும், அப்போது பிரதமராக இருந்தவருமான சந்திரசேகரும்


'இந்து' ராம்

தமிழக அரசுமீது சந்தேகம் கொள்ள ஆரம்பித்தனர்.

விடுதலைப் புலிகளுக்கு கலைஞர் கருணாநிதி அதிக சுதந்திரம் கொடுக்கிறார் என்று குற்றம் சாட்டப்பட்டது.

இந்தியப் பிரதமராக இருந்த சந்திரசேகருக்கு இலங்கை இனப் பிரச்சனை தொடர்பாக போதிய விளக்கம் எதுவும் கிடையாது.

சந்திரசேகர் அரசுக்கு வெளியே இருந்து ஆதரவு கொடுத்தது ராஜீவ் காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சி.

ராஜீவ் காந்தியின் நெருக்குதலும் சந்திரசேகர் தமிழக அரசுமீது குற்றம் சாட்ட ஒரு காரணம் எனலாம்.

ராஜீவ் காந்தியிடம் ஜெயலலிதா நச்சரித்துக் கொண்டிருந்தார். தமிழக அரசை எப்படியாவது கலைத்து தேர்தல் நடத்துமாறு ஜெயலலிதா ராஜீவை தூண்டிக் கொண்டிருந்தார்.

## துக்ளக் சோ

சந்திரசேகருக்கு தமிழ் நாட்டில் ஒரு நண்பர் இருக்கிறார். அவர்தான் துக்ளக் ஆசிரியர் சோ. அவருக்கு புலிகளை கண்ணிலும் காட்டக் கூடாது. தமிழ், தமிழ்நாடு, தமிழீழம் போன்ற முழக்கங்களும் பிடிக்காது.

சோவும் அப்போது தமிழக அரசு புலிகளுக்கு உதவுவதாக குற்றம்சாட்டி வந்தார். அவரது கருத்தும் சந்திரசேகருக்கு கிடைத்திருக்கும்.

மத்திய அரசையும், பிரதமர் சந்திரசேகரையும் திருப்திப்படுத்தும் முகமாக தமிழக முதல்வர் கலைஞர் சில நடவடிக்கைகளை எடுத்தார்.

தமிழ்நாட்டில் 86 விடுதலைப் புலிகள் கைது. ஆயுதங்கள், வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டன. படகுகளுக்கு பாவிக்கப்படும் வெளியிணைப்பு இயந்திரங்களும் பறிமுதல் என்று செய்திகள் வெளியாகின.

தமிழகப் பத்திரிகைகளுக்கு ஒரு பழக்கம் இருக்கிறது. இலங்கைத் தமிழர்கள் யார் ஆயுதங்களுடன் கைதானாலும் 'விடுதலைப் புலிகள் கைது' என்று செய்தி போடுவார்கள்.

உண்மையில் தமிழக அரசால் அப்போது கைதானவர்களில் பலர் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி.எல்.எஃப். டெலோ ஆகிய இயக்கங்களைச் சேர்ந்தவர்களே.

கைது செய்யப்பட்டவர்களை தனி முகாம் ஒன்றில் கடும் பாதுகாப்புடன் வைத்திருக்க உத்தரவிடப்பட்டது.

(தொடர்ந்து வரும்)



அன்றைய காட்டூன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்